ஈழநாடு மறுபிரசுரம்

# தொல்பொருளியல் - ஓர் அறிமுகம்

வி. சிவசாமி
செயலாளர்
யாழ்ப்பாண
தொல்பொருளியற் கழகம்
வட்டுக்கோட்டை

EVELYN RUTNAM LIBRARY
JAFFNA
60/16

செப்டம்பர் 1972

# தொல்பொருளியலும் வரலாறும்

வி. சிவசாமி, எம். ஏ.

பழைய கால மனித வரலாற்றினை அறிதற்கான மூலங்களிலே தொல்பொருள் முக்கியமான இடமொன்றினை வகிக்கின்றது. தொல்பொருள் என்னும் போது, பழங்கால மனிதன் பயன்படுத்திய மண், கல், உலோகமாதியவற்றிலான கருவிகள், உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், வழிபட்ட கோவில்கள், சிலைகள், செதுக்கிய சிற்பங்கள், தீட்டிய ஓவியங்கள், எழுதி வைத்த சாசனங்கள், பயன்படுத்திய மட்பாண்டங்கள், முதலியனவும், இறந்த மனிதனின் எலும்புக்கூடுகளும், அடங்குவன.

## வரலாற்றிலே தொல்பொருளியல்

வரலாற்று ரீதியிலே நோக்கும்போது எழுத்தினை ஆதி மனிதன் திறமையாகக் கையாளுதற்கு முற்பட்ட கால வரலாறு முற்றாகவே தொல்பொருட் சின்னங்களிலிருந்தே அறியப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மனிதன் எழுத்தினைக் கையாண்டு நூல்கள் எழுதத் தொடங்கியபோதும் தொடர்ச்சியாகவமைக்கப்படும் வரலாற்றிலும் தொல்பொருளின் முக்கியத்துவம் நன்கு துலங்குகின்றது. மேலைநாடுகளிலே இலக்கிய மூலங்களிலேயிருந்து அறியப்படும் பல செய்திகளை உறுதிப்படுத்துவதற்கன்றி அவற்றினைப் பிழை மதிப்பிடவும் தொல்பொருட்கள் துணைபுரிகின்றன. மேலும் இலக்கிய மூலங்களிற் குறிப்பிடாத செய்திகளையும் தொல்பொருட்கள் தந்து பிற மூலங்களைப் பூரணப்படுத்துவதுடன் சமகால வரலாற்றினை முழுமையாக அறிதற்கும் உறுதுணையாகவும் விளங்குகின்றன.

மேற்குறிப்பிட்ட அம்சங்கள் சிலவற்றினைச் சற்று விரித்து உதாரணங்கள் மூலம் விளக்கலாம். பழைய கால வரலாற்றினை வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுத் தொடக்க காலம், வரலாற்றுக் காலம் என மூன்று பிரிவாக வகுக்கலாம். பொதுவாக வரலாற்றுக் காலம் மனிதன் எழுத்தினை நன்கு எப்போது பயன்படுத்தினானோ அப்போதுதான் ஏற்பட்டதெனலாம். இந்த ரீதியிலே நோக்கும் போது இந்தியாவின் வரலாற்றுக் காலம் கி. மு. 6-ம் நூற்றாண்டு (பிந்திய உபநிடதங்கள், புத்தபிரான், மகாவீரர்காலம்) தான் ஏற்பட்டதென ஒரு சாரார் கருதுவர். பிறிதொரு சாரார் அசோகர் காலத்துடன் தான் (கி. மு. 3-ம் நூ) ஏற்பட்டதென்பர். இன்னுமொருசாரார் இருக்கு வேத காலத்துடன் (கி. மு. 15-ம் நூற்றாண்டளவில்) ஏற்பட்டதென்பர். ஆனால் வேதகாலத்திலே வரிவடிவம் திட்டவட்டமாக நிலவியதோ என்பதை அறிமுடியாதுள்ளது. பொதுவாக நோக்கும் போது ஹரப்பா கலாச்சாரம் (சி

மு. 2500 - 1500 வரையில்) வேதகாலப் (கி.மு 1500-500 வரை) இதற்குச் சமகாலப் பிரதேச, புதிய கற்கால பிரதேச கலாச்சாரங்கள் முதலியன வரலாற்றுத் தொடக்க காலத்தன எனக் குறிப்பிடலாம். இக் காலத்திலே எழுத்தறிவு ஓரளவு நிலவினாலும் அது நன்கு வளர்ச்சியுற்ற நிலையிலதாகத் தெரியவில்லை. ஹரப்பா கலாச்சாரத்திலே ஒரு வகையான சித்திர எழுத்து நிலவினாலும் அது இன்னும் செவ்வனே வாசிக்கப்படவில்லை. இக் கலாச்சாரம் பற்றிய செய்திகளாவும் பிற தொல்பொருட் சின்னங்களைக் கொண்டு தான் அறிகிறோம். இதற்கு முற்பட்ட காலம்தான் இந்தியாவிலே வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும். இலங்கை வரலாற்றிலும் கி. மு. 6-ம் நூற்றாண்டிலே உத்தியோக பூர்வமாகப் பௌத்தம் பரவுடனே தான் வரலாற்றுக்காலம் ஆரம்பமாயிற்று. இதற்கு முந்திய சில நூற்றாண்டுகள் ஏறத்தாழ மேற்குறிப்பிட்ட காலம் வரை வரலாற்றுத் தொடக்க காலம் எனலாம். ஆகவே வரலாற்றுத் தொடக்க காலம், குறிப்பாக வரலாற்றிற்கு முற்பட்டகாலம் பற்றிய எந்த நாட்டின் வரலாற்றினையும் அறிதற்குத் தொல்பொருளின் முக்கியத்துவம் தெளிவு. ஆரிய நாகரீகம் கொண்ட மக்கள் இலங்கைக்கு வந்தபோது இலங்கையிலே வாழ்ந்த மக்கள் பற்றியோ அவர்களுக்கு முற்பட்டகாலம் பற்றியோ அறிதற்குத் தொல்பொருள்தான் வெளிச்சமிட வேண்டும். இலங்கையின் கி. மு. புதிய கற்காலம் பற்றி அறிதற்குத் தொல்பொருளே துணையாம். இவ்வகையிலே இலங்கை வரலாறு இன்னும் பூரணமடையவில்லை. குறிப்பாக இலங்கைத் தமிழரின் ஆதிகால வரலாற்றிற்குத் தொல்பொருளே பெரிய துணையாகும்.

## தொல்பொருளியற் சான்றுறுதிப்படுதல்

இலக்கிய மூலங்கள் ஏற்பட்டபின் தொல்பொருளின் முக்கியத்துவம் வேறு வகையிலும் காணப்படுகிறது. ஓர் இலக்கிய மூலம் கூறும் செய்தியை இதன் மூலம் உறுதிப்படுத்தலாம்: உதாரணமாக இலங்கையிலே பௌத்தம் கிறிஸ்தாண்டிற்குச் சற்று முன், பின்னான காலங்களிலே துரிதமாக வளர்ச்சியுற்றமை பற்றித் தீபவம்சம், மஹாவம்சம் முதலிய பாளி நூல்கள் கூறுவதைச் சமகாலச் சாசனங்கள் பௌத்த நிறுவனங்களான ஸ்தூபி, விகாரை முதலினவும் உறுதிப்படுத்துவன. இவ்விலக்கிய மூலங்களின் வரலாற்றியல்பினை உணர்த்துவன - சங்ககாலத்தில் தமிழகத்திற்கும் உரோமப் பேரரசிற்குமிடையே நிலவிய செழிப்பான வர்த்தகம் பற்றிச் சங்ககாலச் சங்க நூல்களும், பெரிப்புளுஸ், தொலமி போன்ற கிரேக்க உரோம ஆசிரியரும் ஒரே முகமாய்க் குறிப்பிடுவதை தமிழ்நாட்டிலே கிடைத்துள்ள பெருந்தொகையான உரோமக்காசுகளும் உரோமப் பேரரசின் இறக்குமதியான பாத்திரங்கள், நேர்த்தியான மட்பாண்டங்கள் முதலிய

வற்றின் துண்டுகள்; எஞ்சிய பகுதிகளும் உறுதிப்படுத்திச் சிங்கநூல்களின் வரலாற்றியல்பை நன்கு எடுத்துக்காட்டுவன. இலங்கையின் வடபகுதியிலே முற்காலத்திலே பௌத்தம் சில இடங்களிலே நிலவியது பற்றிப் பாளிநூல் குறிப்பிடுவதைக் கந்தரோடைபோன்ற சில இடங்களிலே கிடைத்துள்ள பௌத்த சின்னங்கள் எடுத்துக்காட்டுவன. வல்லிபுரத்திலே கண்டெடுக்கப்பட்ட தாழி கிறிஸ்து சகாப்தத்திற்கு சற்று முந்திய சில நூற்றாண்டிலேயே தமிழர் அப்பகுதியில் வாழ்ந்ததை எடுத்துக்காட்டுகின்றது. இதுபற்றிப் பாளிநூல்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை. அநுராதபுரப் பகுதிகளிலே தமிழர் வாழ்ந்ததைப் பற்றிப் பாளிநூல்கள் கூறுவதைத் தொல்பொருட் சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன. இத்துறையிலே தொல்பொருள் வரலாற்றினை முழுமையாக அறியவும், பிறமூலங்களிற் கூறப்படாதவிடங்களை அறியவும் உதவுகின்றது.

## கட்டிடக் கலையியல்

இலங்கையிலே கிடைத்துள்ள கட்டிடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் முதலியன சமகாலக் கலைச்சிறப்பினை எடுத்துக்காட்டுவன. மன்னர், மக்களின் கலையார்வத்தினையும், ஆசாரங்களையும் உணர்த்துவன. ஓரளவாவது சமகாலப் பொருளாதார நிலைகளையும், சமய நிலைமைகளையும் பிரதிபலிப்பன. பௌத்தம் பரவிய காலந்தொட்டு இலங்கை யொரு பௌத்த மையமாக விளங்கியதன்றி, இந்துசமய நிலைக்களனாகவும் விளங்கியதை இலக்கிய மூலங்களிலும் பார்க்கத் தொல்பொருட்களே எமக்கு நன்கு அறிவுறுத்துகின்றன. போத்துக்கேயரின் அழிவுக்கொள்கையாலும், பிறகாரணங்களாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலே தேவிநுவர, முன்னேஸ்வரம், பொன்னாலை, மாவிட்டபுரம் முதலிய இடங்களிலே விளங்கிய பிரசித்திபெற்ற பழைய இந்துக்கோவில்களின் அழிவுகளைக் கூட முழுமையாகக் கிடைத்தில. திருக்கோணமலை, மாதோட்டம் ஆகிய இடங்களிலே சில எஞ்சியுள்ளன. கடலிலிருந்து எடுக்கப்பட்ட திருக்கோணமலைக் கோவிலின் பழைய தூண் ஒன்றிலே சென்ற மாதம் சோழர் காலத்தமிழ்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது; யாழ்ப்பாணக் கோட்டையிற் கிடைத்த சோழசாசனமும் இப்பகுதியிலிருந்த கோவிலொன்றின் தூணே ஆகும். அதுபோலவே யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தேர்க்கடைச் சாசனமும் இப்பகுதியிலிருந்த அரண்மனை அல்லது கோவிலைச் சேர்ந்த தூணிலேதான் பொறிக்கப்பட்டுள்ளது.

## நாணயவியல்

நாணயங்கள் முறையாகச் சமகாலமன்னர் ஆளுகையைக் கலை ஆர்வம், செல்வச் செழிப்பு, சமய ஆர்வம், ஆகியவற்றுள் ஒன்றையோ பலவற்றினையோ பிரதிபலிப்பன. நாணயங்கள் குறிப்பிடும் மன்னர் கால உலோகங்களின் விலைமதிப்பை அறியவும் உதவுவன. அம்மன்ன

தின் ஆதிக்கப் பரப்பினை வரையறுக்கவும் உதவலாம். ஆனால் பின்னையது உறுதித் திட்டமாகக் கூறமுடியாது. ஏனெனில் நாணயங்கள் மன்னரின் ஆதிக்கத்தினைப் போன்று வியாபாரத் தொடர்புகளையும் எடுத்துக் காட்டுவன எனலாம். உதாரணமாக ரோமப் பேரரசர்களின் பல நாணயங்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் கிடைத்துள்ளன. இதனால் இந்நாடுகள் உரோமப் பேரரசின் ஆணைக்குட்பட்டிருந்தன எனக் கூறமுடியாது. இதுபோலவே இலங்கையிற் கிடைத்துள்ள காலத்தால் முந்திய "புராணம்" நாணயங்கள் இந்தியாவிலும் பெருமளவிற் கிடைத்துள்ளன. இவை வியாபாரத் தொடர்பாக இந்தியாவின் பல பகுதிகளில் மட்டுமன்றி ஈழத்திற்கும் கொண்டுவரப்பட்டன. ஈழக்காசுகள் தென்னிந்தியாவிலே வியாபாரத் தொடர்பாகக் கொண்டுவரப்பட்டன. மேலும் குறிப்பிட்ட மன்னர் ஒருவரின் நாணயங்கள் அவர் இறந்தபின்னரும் சிலகாலம் புழக்கத்திலே வியாபாரத்திற்குப் பயன்படுத்தப்படலாம். நாணயவியலை வரலாற்றுமூலமாக மதிப்பிடும்போது மேற்குறிப்பிட்ட சில பிரச்சினைகளைக் கவனிக்கவேண்டியுள்ளது.

## சாசனவியல்

சாசனங்கள் ஒரு முக்கியமான வரலாற்றுமூலமாகும். பிற மூலங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது சிலவகைகளிலே குறிப்பிடத்தக்கது. சாசனம் பெரும்பாலும் சமகாலத்தது. அதில் இடைச்செருகல்கள் இலக்கியத்திற் போன்று ஏற்படாது. எனினும் சிதைந்துபோகாது- இடைசெருக் குறைவாலே கூறப்படும் பொருள் சொற்சுருக்கமாகவும், பொருள் செறிவாகவும் கூறப்படலாம் எனவே புனைந்துரை, கற்பனைகள் முதலியனவற்றிற்கு வாய்ப்பு குறைவாயினும், இவ்வியல்புகள் உள்ள சாசனங்கள் உள்ளன. மேலும் சாசனங்கள் இலக்கியம், பிறதொல்பொருட்கள் முதலியன கூறுவனவற்றை உறுதிப்படுத்தவும், சிலவேளைகளிலே முழுமையாக்கவும் துணைபுரிவன. இந்தியாவிலும் ஈழத்திலும் பெருந்தொகையான சாசனங்கள் பல மொழிகளிலே கிடைத்துள்ளன. அவற்றிற் பல இன்னும் செவ்வனே வெளியிடப்பட்டில. மேலும் சாசனங்கள் பல கிடைக்கலாம். யாழ்ப்பாணக்குடா நாட்டிலேயே சாசனங்கள் சிலவாகவே இனிமேலும் கிடைக்கலாம். இச்சாசனங்களை வரலாற்றாசிரியர் நன்கு ஆய்ந்தே முடிவுகளை வெளியிடவேண்டும். வரலாற்றுக் காலத்திலே பிறமூலங்களிலே கிடைக்கமுடியாத சரித்திர விடயங்கள் இவற்றின்மூலம் அறியப்படுகின்றன.

## மட்பாண்டவியல்

ஆதிகாலந்தொட்டு மனிதன் மண்ணினைப் பலவாறு உபயோகப்படுத்தி வந்துள்ளான்- தனக்குத் தேவையான உணவு உற்பத்தி, இருப்பிடம்- வழிபாட்டிடம், வழிபாட்டுச் சின்னங்கள் அன்றட வாழ்க்கைக்குத் தேவையான சட்டி, பானை போன்ற பாத்திரங்கள் வனைதல் அடக்கம் செய்வதற்கான தாழி முதலியவற்றிற்கும் மண் உபயோகப்படுத்தப்பட்டது. மிகப்பழைய காலந்தொட்டு மட்பாண்டங்கள் உபயோ

கத்தியிருந்தன. இவை முதலிலே கரடுமுரடாக இருந்தன. குயவனின் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டபின் தேர்த்தியான, அலங்காரமான பாத்திரங்கள் வனையப்பட்டன. இவற்றிலே பல்வேறு கோடுகள், வளைவுகள், புள்ளிகள், சித்திரங்கள் முதலியன வரையப்பட்டன. கற்கள் ஒன்றோடொன்று தீட்டப்பட்டன. இவை உபயோகத்துடன் கலைச்சிறப்பும் பொருந்தி விளங்கின-

இப்புதிய கற்காலப் பண்பாடுகள் பழைய கற்காலத்திலே அதிகரித்த மனிதனின் நாகரிக முன்னேற்றம், தொழில் நுட்ப முன்னேற்றம், கலை ஆர்வம், உணவுகளைப் பதன்படுத்தல், பயன்படுத்தல் முதலியனவற்றை அறிவதற்கு உதவுவன. இவை எகிப்திலே அழிந்துபோனவா. இலங்கையிலே அநுராதபுரம், பலாங்கொடை, மாதோட்டம், கந்தரோடை, வல்லிபுரம் முதலிய பல இடங்களிலே பழையகால மட்பாண்டங்கள், கல்லோடுகள், கிடைத்துள்ளன. இவற்றின் முறைப்படி ஆராய்ந்து உண்மையின அறியவேண்டும்.

## மானிடவியல் தரவும்

மனித எலும்புக்கூடுகளை மானிடநூலாசிரியர் ஆய்ந்து குறிப்பிட்டன மக்களின் இனம், அவர்களின் கலாச்சாரம் பற்றிக் கருத்து மனிதன் பயன்படுத்திய தாவரத்தின் பகுதிகளும் குறிப்பிடத்தக்கன: ஆதிகால தொல்குடி மக்களையும் தேவைகளுக்கும் மனிதன் தாவரத்தினை எடுத்தே. எனினும் அவை பயன்படுத்தியும் னர்: இவையும் தொல்பொருளியலே அடங்குவன. விஞ்ஞான முறைப்படி தொல்பொருள் சின்னங்களின் காலவரையறையினைக் கணிப்பதற்கு தாவரத்தின் பகுதிகளும் எலும்புகளும் கிடைத்தால் உதவியாகவிருக்கும்.

இன்று விஞ்ஞானம் மிகத் துரிதமாக விருத்தியடைந்த காலத்தில் வாழும் நாம் இக்கருவிப் பயன்படுத்திக் காலவரையறை அறியமுடியாத தொல்பொருட்களின் காலத்தினை நிர்ணயிக்க முடிகின்றது. எனவே இக்காலத்தில் இதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான விஞ்ஞான முறைகளைச் சுருக்கமாகப் பின்னர் விளக்கலாம்.

## ஈழத்தமிழர் வரலாறும் தொல்பொருளியலும்

தொன்றுதொட்டு ஈழத்தின் அரசியல், பொருளாதார, சமய, கலாச்சார நிலைகளுக்குப் பங்கேற்று வருவகையிலே ஆக்கபூர்வமான தொண்டாற்றிவரும் தமிழரின் ஆதிகாலவரலாற்றி இன்று கிடைத்துள்ள இலக்கிய மூலங்கள் நன்கு குறிப்பிடவில. தீபவம்சம், மஹாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி நூல்களோ பிற்காலத்திலே தமிழில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களோ தேதி குறிப்பிட விடயங்களை முழுமையாகக் குறிப்பிடவில எனவே இத்துறையிலே தொல்பொருளியல் தான் துணைபுரியவேண்டும். பொம்பரிப்பு, அநுராதபுரம், கந்தரோடை போன்ற பல இடங்களில் கிடைத்துள்ள பழைய காலப் பெருங்கற்சமாதி

சின்னங்களைச் சேர்ந்த தாழிகள் இதற்கொரு முக்கியமான எடுத்துக்காட்டாகும். எனவே இத்துறையிலே பலரும் ஊக்கமெடுத்து முயற்சிக்கவேண்டியது அவசியம்.

# தொல்பொருளியலாய்வு

பழமையான குடியிருப்புகள், இருந்த இடங்களிலே தான் பெரும்பாலும் தொல்பொருட் சின்னங்கள் கிடைக்கலாம். தொல்பொருளியல் மனித வாழ்க்கைப் பற்றிய ஓர் ஒழுங்கான ஞானமே. தொல்பொருட்கள் உள்ள இடங்களைப் பொதுமக்கள் பல அறிகுறிகள், சான்றுகளைக்கொண்டு அறியலாம். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதிகள் தமக்குப்பல சந்ததிகள் அல்லது பல நூற்றாண்டு காலத்தின்முன் தமது நிலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் வாழ்ந்த கைவிடப்பட்ட இடங்களை எளிதில் அறியலாம். அப்பகுதி திடலாகவோ அன்றி மேடாகவோ காட்சியளிக்கலாம். அம் மேடுகளிலே பழமையான சின்னங்கள் - கட்டாண்டங்கள், கட்டடத்தின் சில பகுதிகள், கட்டடப்பொருட் சிதைவுகள், பழைய கருவிகள், நாணயங்கள், ஓடுகள், வேறு பிற பழம் பொருட்கள் சிதறலாகவோ, அன்றிப் பெயர்ந்த நிலையிலோ தென்படலாம். எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்திலே கந்தரோடை, சுன்னாகம், வல்லிபுரம், காரைநகர், நெடுந்தீவு போன்ற இடங்களிலே காணப்படுகின்றன. இவற்றுள் சிலவற்றிலே தனிப்பட்ட வகையிலும் அரசாங்க ரீதியிலும் சில ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பொதுவாக நிலம் கடல்மட்டத்திலிருந்து அவ்வளவு உயரத்தில் இல்லை. ஆகக்கூடியது சுமார் 30 அடியாகும். எனவே கலாநிதி போல். இ. பீரிஸ் கூறுவதுபோல இத்தகையபிராந்தியத்திலே காணப்படும் ஒவ்வொரு திடலும் எமது கவனத்திற்குரியன - அவர் யாழ்ப் பிரதேசத்திலே பிரயாணம் செய்யும்பொழுது தற்செயலாகச் சுன்னாகப்பகுதியிலே வெளிப்போர்த்தபோது சில மேடுகளைக் கண்ணுற்றுப் பின்னர் அங்கு போய்ப் பார்த்தபோது வெளுத்த தாதுகற்ற மொண்டிலைக் கண்டுபிடிக்க முடிந்தது. அதைத்தொடர்ந்து கந்தரோடை போன்ற இடங்களிலும் சின்னங்களைக் கண்டுபிடித்தார். இவ்வாறு நாமும் சிலமேடுகளைக் காணும்போது அவற்றிலே சிறிது தோண்டினால் முக்கியமான பழைய சின்னங்கள் ஒருவேளை தென்படலாம். மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள சில முக்கியமான பழைய இடப்பெயர்கள் தமிழ், பாளி, சிங்கள இலக்கிய நூல்கள் வாயிலாகவும் அறிகிறோம். இலக்கியக் குறிப்புகளும் சில இடங்களை ஆய்வதற்கு உதவுவன.

சில இடங்களிலே அந்தப்பகுதி மக்களிடையில் நிலவும் சில கதைகள் அப்பகுதிகளிலே 'குடியிருக்கக்கூடாது' எனப் புறக்கணிக்கப்பட்ட நிலங்களும் கவனிக்கத்தக்கவை- சிலர் அந்

தகைய இடங்களிலே பழைய மனிதர் வாழ்ந்தனர், பின் அவற்றைவிட்டுப் புலம் பெயர்ந்தனர். அவ்விடங்களிலே பேய் பிசாசுகள் உறைகின்றன" எனக் குறிப்பிடுமிடங்களும் கவனத்திற்குரியன. அப்பேர்ப்பட்ட இடங்கள் ஈழத்தில் பல உள்ளன. இத்தகைய நிலைமைகள் பெரும்பாலும் சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தனவே. சில இடப்பெயர்கள் குறிப்பிட்ட இடத்தின் பழைய கால முக்கியத்துவத்தினை அறிய உதவும்.

வேறு சில இடங்களிலே சாதாரண மக்கள் தாம் வாழும் நிலங்களிலே மிகப் பழைய காலத்திலே மக்கள் சிறப்புடனோ சிறப்பின்றியோ வாழ்ந்ததை மறந்துவிட்டனர். எனவே அவ்விடங்களிலே நிலத்தினைப் பயன்படுத்தும்போது - விவசாயத்திற்காக நிலத்தினைப் பண்படுத்தல், கிணறு வெட்டுதல், குழிவெட்டுதல் முதலியன செய்யும்போது பழம்பொருட்கள் வரலாம். அவற்றினூடே விலையுயர்ந்த பொருட்களும் வரலாம். இத்தகைய நிலையிலே இவை தம்மை அறியாத மக்கள் "புதையல் கிளம்புவதாகவும் எடுப்பதாகவும்" இதனைக் கூறுவர். இவர் இத்தகைய புதையலுக்கும் [Treasure hunt] திரிவர். இதனால்தான் இப்பொழுது தொல்பொருளியல் ஈடுபாடுள்ளோர் [இப்போது ஒரு சிலரே]' எவராவது இத்தகைய மேடுகளையோ இடங்களையோ கேள் பகுதியாய்வில் ஈடுபட்டால் அவர்கள் "புதையலுக்குத் திரிகிறார்கள்" என்று கூறுவதைக் கேள்விப்படுகிறோம். அவர்களுடைய நோக்கம் வேறு - இவர்களுடைய நோக்கம் வேறு. பொருளைத் தேடியெடுப்பதில் இரு சாராருக்கும் ஒற்றுமையுண்டு. ஆனால் அதனைப்பயன்படுத்துவதிலோ பெரிய வேறுபாடு உண்டு. வேறுசிலர் தொல்பொருளியல் ஈடுபாடுள்ளோரைப் 'புதையல்காரர், வேலையில்லாதவர்கள், வீண் செயலினர்' எனப்பட்டம் சூட்டுகின்றனர். இத்தகைய போக்கு எம்மவரிடையிலிருத்தல் நன்றன்று. 'தொல்பொருள் ஆராய்ச்சியாளனும் மனிதனிடத்து ஈடுபாடுள்ள மனிதனே. தான் தேடிப்பெற்ற அல்லது அறிந்த தொல்பொருட்சின்னங்களைக் கொண்டு பழைய கால மனித வாழ்க்கை முறைகளைப் புதிய பாணியில் எமக்கு எடுத்துக் கூறும் சிருஷ்டிகர்த்தாவே. முதாதையர் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை எமக்கு மிக ஈடுபாட்டுடன் கூறும் ஆராய்ச்சியாளனே.

வேறுசில நிலப்பகுதிகளிலே மக்கள் தற்போது வாழாத காடுகளாகக் காட்சியளிக்கும் பகுதிகளிலே உள்ளவும் சில. அப்பகுதிகளிலே முற்காலத்திய மக்களின் நாகரிகச் சின்னங்களிருப்பதைக் கண்டாலும் மனத்திலே பொதுவாக ஈடுபாடு கொள்ளுவதில்லை. இத்தகைய இடங்களிலே தொல்பொருளியலில் மிக்க ஈடுபாடுள்ளோரே கவனஞ் செலுத்த வேண்டியவராவர். இலங்கையின் பழைய இலக்கிய வரலாற்று மூலங்களைத் துணைக்கொண்டு அவ்விடங்களை அடையாளம் காணக் கூடியதாகும். போர்த்துக்கேயர் போன்ற பிறநாட்டவரின் படையெடுப்புகள், ஆதிக்கலம்

களிலே மக்கள் தமது கோவில்கள் அழிக்கப்பட்ட வேளையில் செல்வச் சிலைகளைக் கிணறுகளிலும் கேணிகளிலும் ஏனைத் துக்குள்ளும் ஒளித்து வைத்தனர். அப்படியானவற்றிற் சில இக்காலத்திலே யாழ்ப்பாணம், திருகோணமலை, முதலிய இடங்களிற் கிடைத்துள்ளன. கீழ்மாகாணத்திலே பல இடங்களிலே பழைய சிலைகளுக்குக் கட்டுப்பாடு இல்லை. குறிப்பிட்ட ஓரிடத்திலே ஒருவர் கோவில் கட்டிவிட்டு கட்டளையான காட்டிற்குச் சென்று பழைய தெய்வச் சிலை கொண்டு வந்து வழிபட்டார் என எனது நண்பர் ஒருவர் கூறினார். ஆனால் அவ்வாறு கொண்டுவந்த பிரதிஷ்டை செய்யும்போது பழைய சிலை பிற்காலத்துத் தெய்வத்திருத்தகிய சிலையாகவும் மாறலாம்.

தொல்பொருள் ஆய்விடங்களை நன்கு கவனிக்கவேண்டும். கேடுகளையோ அல்லது தொல்பொருட்களைப் பிற பகுதிகளையோ நீக்கினால் ஆய்வு முடியாது. இடத்திற்கேற்றவாறு சில ஒழுங்குகளைக் கவனிக்க வேண்டும். தொல்பொருட்கள் இடம் கள்ளாவற்றினையும் அப்படி ஆராய முடியாது. கேற்பட்டகளைக் [illegible] அமைந்து கொண்டு போகலாம். தற்காலத்திலே குழிவெட்டி முதலில் பரிசீலித்துப் பார்த்து அகழ்வாராய்ச்சி செய்வர். படம் படமாகத் தொல்பொருட் சின்னங்களை எடுத்து வகைப்படுத்தலாம். அகழ்வாராய்ச்சியிலே பயிற்சி இல்லாதவர் செய்யக் கூடாது. பயிற்சியுள்ளவரும் அதற்கேற்ற உபகரணங்களைப் பயன்படுத்தவேண்டும். எவ்வளவு நிலையினையும் ஓரளவு கவனித்தல் வேண்டும். ஏனெனில் ஒருவர் அகழ்ந்தெடுக்கும் சின்னங்களின் படைபோருள் ஒரே பக் கூடாது. அது இல்லாததால் காலவரையறையிற் தமக்கன்றிச் சின்னங்களின் முக்கியத்துவமும் மாறிப் போம். இந்தியாவிலே படைபடையாக அகழ்ந்து ஆயும் முறையினைப் புகழ் பெற்ற தொல்பொருள் ஞானியான திரு. மார்டிமர் வீலர் சில காலத்துக்கு முன் புகுத்தினர். இம்முறையே இந்தியாவிலும் இலங்கையிலும் பயன்படுத்தப்படுகிறது. தொல்பொருளியலிலே பயிற்சி இல்லாதவர் மேற்பகுதியை ஆய்வு செய்யலாம்.

# விஞ்ஞான வளர்ச்சியும் தொல்பொருளாய்வும்

தற்காலத்திலே விஞ்ஞான வளர்ச்சியினாலே தொல்பொருளாய்வும் விசேஷமாக விலே நன்கு துலங்கி பெற்றுள்ளது. இதற்கான முறைகள் குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா, மேற்கு ஆசியா, இந்தியா முதலிய நாடுகளிலே நன்கு பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

கார்பன்-14 முறை அல்லது கதிர்த்தொழிற்பாடுடைய கரிமதானியின் மூலம் தொல்பொருட் சின்னங்களின் காலத்தை நிர்ணயித்தல்:-

வகிலா உயிர்வர்க்கங்களிலும் காபன் -14 ஓரளவு உண்டு. அவை இறக்க அதிலின் உறுப்பிலுள்ள காபன் அழிவடைந்துகொண்டிருக்கும்; இச் காபனின் அரைவாசி 5568 ஆண்டுகளிலே அழிந்து போகுமாம். இதனை அரை வாழ்க்கைக் காலம் என்பர். 3/4 பகுதி இரு வாழ்க்கைக் காலங்களில் அழிந்து போகும். இவ்வாறு காபன் அழியும். குறிப்பிட்ட இடத்திலே கிடைத்துள்ள தொல்பொருட்சின்னங்களிலே உயர்வர்க்கங்களின் எஞ்சிய பகுதிபோதாவது இருந்தால்தான் இம்முறையினைப் பயன்படுத்தலாம். தொல்பொருட் சின்னங்களின் காலத்தை மறையிலே நிர்ணயித்தற்கு இஃது ஓர் முக்கியமான முறையாகும். இதன்படி கிடைத்துள்ள காலத்தால் முந்திய சின்னம் தெற்காசிலே கிடைத்த மரத்துண்டாகும் இதன் காலம் கி. மு. 58000. இங்கு மனிதன் வாழ்ந்திலன். ஆனால் மனித நடமாட்டத்திற்கு இதன்படி கிடைத்துள்ள காலத்தால் முந்தியவை. கி. மு. 35,000. 32,000 ஆண்டுகளாகும். இவை முறையே வட அமெரிக்காவிலுள்ள டெக்ஸஸ் இராச்சியத்திலுள்ள சனிதன் குகை ஆகியவற்றிலே கிடைத்துள்ள கரித்துண்டுமூலம் அறியப்படுகின்றன. காலத்தால் முந்திய விவசாய கிராமம். வட இராக்கிலுள்ள ஜர்மோவாகும். இதன் காலம் கி. மு. 7000. இதிலும் பார்க்கப் பலஸ்தீனத்திலுள்ள ஜெரிக்கோ முந்தியதாகும். இந்தியாவிலே நர்மதை ஆற்றுக்கரையிலுள்ள நவ்டாதோலி இராசத்தில் கிடைத்துள்ள கல்- உலோக கால நாகரிகச் சின்னங்கள் இதன்படி கி.மு. 1700 1100 வரையுள்ள காலத்தவை. சிந்து சமவெளி நாகரிகம் கி. மு. 2500 அளவிலே சிறப்புற்றிருந்தது எனத் தொல்பொருளாய்வாளர் கொண்ட கருத்தை இம்முறையிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடற்பாலது. இம்முறையைக் கண்டு முன்னர் தொல்பொருளாராய்ச்சியாளர் தொல்பொருட் சின்னங்களின் காலப்பகுதியை மட்டங்களைக்கொண்டே நிர்ணயித்துவந்தனர். எடுத்துக்காட்டாக ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள நாகரிகச் சின்னங்கள் 7 மட்டங்களிலே காணப்பட்டன என்றும் ஒவ்வொரு மட்டமும் தோன்றி நிலைக்க சுமார் 150 ஆகியது 500 ஆண்டுகள் சென்றுமெனக்கொண்டால் அந்நாகரிகம் கி.மு. 1100-1400 ஆண்டுகள் என மதிப்பிடலாம். இவ்வாறுதான் இந்தியன் நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் ஆகியவற்றின் காலம் முதலிலே வரையறை செய்யப்பட்டது. காபன் - 14 முறை மற்றையவற்றிலிருந்து முன்னேற்றமானது பெருமளவு சரியானது

## தொல்காந்தம் அல்லது எஞ்சிய காந்தம்

(Archaoes or Remnant Magnetism)

சுடுகல், களிமண் வகைகளிலே இரும்பு 'ஒக்சைட்' ஓரளவு உள்ளடங்கியுள்ளது ஓரளவு காந்த இயல்பு உள்ளன. பழைய சூளைகள் அடுப்புகள், எரிந்த கட்டிடங்கள் ஆகியவற்றிலே காந்தத்தன்மையிருப்பதாக விஞ்ஞானிகள் கண்டனர். இதன் அளவை அளந்தே காலம் கணிப்பிடலாம்.

இவ்வாறு (அடையாளமிடக் குறி வரைவு X) வரை படம் 8000 ஆண்டுகள் வரை தயாரிக்கலாம். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பொருளின் காலத்தினைச் சுமார் கால் ஆண்டு வேறுபாட்டிற்குள் கணித்துவிடலாம். இம் முறையினும் நன்கு பயன் படுத்தப்படவில்லை. பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

## வெப்பக் சுடரொளி

(Thermoluminiscence)

இரு புதிய முறைகள் மூலம் விஞ்ஞானிகள் தொல் பொருட்களை முன்னையிலும் பார்க்க 60,000 ஆண்டுகள் வரை கணிக்கின்றனர். இவற்றில் ஒன்று மட்கல ஓடுகள் குடுவை பிறமட்பாண் டங்கள் ஆகியவற்றைச் சூடாக்கும்போது எலக் ரூன்" ஒளியினைக் குறிப் பிடும் சற்றது எளிமைக் கண்டுபிடியாத்செய்யப்பட்ட பொருட்களின் காந்தன் மைப் பண்டங்கள் அனைத்தும் எல்லாப் பொருட்களிலும் கதிர்த் தொழிற்பாடுடைய மூலகங்கள் உள்ளன. இவற் றினை கதிர்வீச்சு ஏற்படும் இதனுடன் சாதாரண வெப்ப நிலையிலேயுள்ள இவை தனி மனிக்கு உருக்களிலேயுள்ள "எலக்ரோன்கள்" தாக்கப் படும். இந்த நிலை கூடிக் கொண்டுபோக, அப்பகுட "எலக்ரோன்" தொகை அதி கரிக்கும். ஒவ்வொன்றைப் பண்டத்தை செழுமைத்திலுள்ள புஸ்ஸியர் வெளிதேர் நிறுவ னம் இம்முறையினைப் பரீட் சித்தது. வெப்பச் சுட ரொளி மூலம் சுமார் ஒரு லட்ச மாண்டுகளையுடைய வரை பொருட்களின் காலத்தினைக் கணிக்கலாம். இதன் மூலம் அரிசோனாவிலே 15,000 ஆண்டு முற்பட்ட காலத்திய எரிமலைக் குழம் பினைக் கணித்தனர். இ மு றம் நூற்றாண்டு தொடக்க முன்னைய பழைய கிரேக்க மட் பாண்டங்களைக் கணித்தனர் காலம்—14 முறைக்குத் தேவையான கரித்துண்டு அல்லது மரம் போன்றவை இல்லாத வரலாற்றுக்கு முற் பட்ட கால சமூகங்களின் காலவரையறையினைக் கணித் தற்கு இம்முறை குறிப்பாக முக்கியமானதாகும். அத் துடன், பல்வேறு பாணிகள் உருவங்களையுடைய மட்பாண்டங்களின் சரியான காலவரையறையினை நிர்ண யிப்பதற்கும் இம்முறை உதவும்.

தொல் பொருளியலாளர் கைத்திறன் வளர்ச்சி, அலங் காரம் உருவரை முதலியன வற்றை ஒப்பிட்டே குறிப் பிட்ட மட்பாண்டங்களின் காலத்தினை நிர்ணயித்து வந்தனர். ஆனால் மேற் குறிப்பிட்ட நுட்ப ஆய்வு முறை மூலம் தொல் பொரு ளாராய்ச்சியாளரின் கால வரையறை சரியோ எனப் பரிசோதித்துப் பார்க்கலாம்; அல்லது உறுதிப்படுத்தலாம் இத்தகைய முறை இந்தியா இலங்கை போன்ற நாடு களிலே நன்கு பயன்படுத்த வாய்ப்புகள் உண்டு

## விமானப் படவியல்

இதன் மூலம் கண்ணித்துப் புலப்படாத தொல்பொருட் சின்னங்களை இடம் கண்டுபிடிக்கலாம் முதலாவது உலகப்போர்க் காலம் தொடக்கம் விமானப் படமுறை ஐரோப்பாவிலும் மேற்கு ஆசியாவிலும் பயன் படுத்தப்பட்டது. இதனை அறிந்த இடங்களிலே இந் தியாவிலும் விமானப்பட

மெடுத்தனர். வானிலிருந்துள்ள சர்சஸ் மகிடம் இதன்மூலம் அறியப்பட்டது. இதுமூலம் இத்தாலியிலுள்ள எற்றுஸ்கன் சமாதிகள் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மண்ணின் நிற வடிப்பு, வளர்ச்சி மரநிழல் அமைப்புக்கள் முதலியன குறிக்கோளைய அல்லது குறியாகித்தனைச் சாய்வான வெளிச்சத்திலே புதிய புகைப்படக் கருவிகள் மூலம் காட்டப்படும். விமான படங்கள் 'வரைப் பட' போலவே காணப்படும். இவ்வாறு எடுத்த விபிலே கண்ணுக்குப் புலப் படாதிருந்த பண்டைச்சிப என்ற வளமான நகரம் அதன் அருகிருந்த சமாதிகள், தெருக்கள், முதலியவற்றுடன் "எக்ஸ் ரேயிற்" போன்று காணப்பட்டது. இம்முறை எந்த நாட்டிற்கும் நன்கு பயன்படும்.

மின்தடை அளவீடு (Electrical Resisting Surveying) முறையும் காந்த அளவீட்டு (Magnetic Prospecting or Surveying முறையும் விமானப்படங்களுக்குத் துணைபுரிவன. காந்த அளவியல் நெருப்பு அல்லது மரத்திற்கே பயன்படும். கற்களை அல்லது அத்திவாரங்களுக்குப் பயன்படாது.

அகழ்தலின்றிக் குகையின் உட்பகுதியைப் படமெடுத்தல்.

கி. மு. 6-ஆம் நூற்றாண்டு வரையுள்ள எற்றுஸ்கன் சமாதிகளின் உட்பகுதி புகைப்படக்கருவி மூலம், அகழ்ந்திடப் படமெடுக்கப்பட்டது. இம்முறையின் மூலம் சமாதியொன்று வெறுமையாக உள்ளதா அல்லது முற்றாக அழிந்துவிட்டதா என அறிந்த உடனேகாரணமாக அகழ்வாராய்ச்சி நடத்த அவசியமா என்பதை தீர்மானிக்கலாம். இதுமட்டுமன்றி நன்கு மூடப்பட்டுள்ள சமாதி ஒன்றிலுள்ள சுவரோவியங்களை படமூலமாக அறியவும் இம்முறை துணைபுரிகின்றது.

மின்மூளை (Computer) இன்று விஞ்ஞான முன்னேற்ற முள்ள நாடுகளிலே 'கொம்பியூட்டர்' என்ற இயந்திரம் மனிதனுக்குத் துணைபுரிகின்றது. தொல்பொருள் இயலிலும் பழைய ஆய்விலும் 'கொம்பியூட்டர்'களும் பயன்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் குறிப்பிட்ட காலத் தொல்பொருள்கள் சிலவற்றினைக் கொண்டு அக்கால நாகரீகம்பற்றி அறியலாம். எடுத்துக்காட்டாக ஸ்கண்டிநேவியாவிலுள்ள ஆசியக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த அஸ்கோபர் போல போன்றோர் சிந்துசமவெளி நாகரீக எழுத்துக்களை ஆய்ந்து அங்கு பேசப்பட்ட மொழி திராவிடமெனக் கூறுகின்றனர். இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

இது காலத்திற்குக் காலம் வேறுபட்டு வந்துள்ளது. "இடைக்கால தொல்பொருள் இயலினுள்ளே குறிப்பிடத்தக்க மாற்றச் சரியான வருணனைத் திட்டங்கள், அளவுகள் படங்கள் அல்லது புகைப்படங்கள் மூலம் கூறல் சாசனங்களைப் பிரதிசெய்தல் முதலியனவே தொல் பொருளியல் நோக்கம்" என சிலர் கருதினர். "வரலாறு அல்லது முற்பட்ட தொன்மைக்குப் பேசப்படாத தொல்பொருட் சின்னங்கள் காணப்படும் நாடு முழுவதிலும் தேடிக்

கண்டு ஒழுங்காக வர்ணித்தலே இதன் நோக்கம் என 1870லே கனிங்காம் குறிப்பிட்டார். இனத்திற்கேற்றவாறு அல்லது கலை வரலாற்றிற்கு ஏற்றது எடுத்துக் கூறலே இதன் நோக்கமெனப் போர்க்கெல் என்பார் குறிப்பிடுகின்றார். சேர்விலஜூலி என்பவர் கூடுதலான காலவரையறைகளை அறிதலே இதன் நோக்கம் என்பர். கலாச்சாரங்களின் காலவரையறையின் முறைப்படி கூறலே இதன் நோக்கமென கலாநிதி மார்டிமர் வீலர் 1944லே இந்தியத் தொல்பொருள் ஆய்வாளரியம் பற்றிக் குறிப்பிடுகையிலே எடுத்துரைத்தார். இத்தகைய நோக்கங்கள் அவ்வக்காலச் சூழ்நிலைகளுக்கு உகந்தனவாய் இருந்திருக்கலாம்.

கலாநிதி எச். டி. சங்காலியா போன்ற அறிஞர்கள் "முழுமனிதனைப் பற்றிய ஞானமே" இதன் நோக்கமென இக்காலத்திலே வற்புறுத்தினர்; வற்புறுத்திவருகின்றனர். இந்தியாவினதென்ன, ஈழத்தினதென்ன, இங்கிலாந்து அல்லது அமெரிக்காவினதென்ன மனிதனை முழுமையாக அறியவேண்டும். அவன் செய்த கலை நேர்த்தியான அல்லது சாதாரணப் பொருட்கள், அவன் வாழ்ந்த சூழ்நிலை (சுவாத்தியம் மிருகம் மரம் முதலியன) அவனுடைய சமூக சமய பொருளாதார நிலைகள் (ஜன அடர்த்தியுடன்) தாம் ஆயும் குறிப்பிட்ட காலநிலையில் அவன் அடைந்த கட்டம் அல்லது கட்டங்கள் முதலியனவற்றை அறிதலாம்.

எனவே அகழ்வாராய்ச்சியும் அதற்கு முன்பின்னான விசாரணையும் சேர் லொக் ஹோம்ஸின் குற்றமறியும் செயல்போன்றதாம். இதன்படி எதுவும் புறக்கணிக்கப்படுவதில்லை அல்லது முற்றாகக் கைவிடப்படுவதில்லை. மண்ணும் நுணுக்கமாகவே ஆராயப்படும். கட்டடங்களும் அப்படியே. சின்னங்களாயவற்றிற்கும் எவ்விடத்தும் ஒரேவிதமான கவனம் செலுத்தப்படும். ஏனெனில் தொல்பொருளியலுடைய லகத்திலும் நடுநாயகமே ஏற்படுத்தியுள்ளது. தொல்பொருளியலின் நோக்கத்திற்காகவும் அடிமைகள், மனிதனைச் சூழ்ந்துள்ள உலகம், தாவரம், மிருகம், ஆகியவற்றுடன் தொடர்புள்ள மனிதவாழ்வின் எல்லாத் துறைகளைப் பற்றியும் அறிவது இதன் நோக்கமாகும். இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் எப்பொழுதும் வரையறுக்கப் படுகின்றன. இவ்வாறு எமது நோக்கங்களும் விரிவுறவே, எமது வழிவகைகள் முழுமையுறும் அல்லது மாற்றமுறும். மனித வர்க்கம் முழுவதினதும் கடந்தகாலம் திரும்பவும் சிருஷ்டிக்கப்படுகின்றது. தொல்பொருளியல் அறிவின் நோக்கிலே பழங்கொள்கைகள், புதிய முக்கியத்துவம் திரும்ப அடைகின்றன. இவற்றினை ஒழுங்குபடுத்தி அவன் எமக்குப் பழைய ஆனால் புதியனவாகிவிட்ட புதியவோர் ஒன்றை அமைத்துக்காட்டும் இதற்பியின்றும். தொல்பொருளியலின் அத்துறை ஒருவனாபான இயற்கை விஞ்ஞானி

கட்டுமன்றி மனித இனத்தை யாதியுமானன். தொல்பொருளியல் வாண்ட ஒரு மனிதப் பண்பியல் பற்றிய தன்று.

இன்றைய உலக விஞ்ஞானத்திலே புரட்சிகரமான முன்னேற்றங்கொண்டு செல்லுகின்றது. கடந்த 2500 ஆண்டுகளிலும் மனித நாகரிகத்தில் ஏற்பட்ட மாற்றங்களிலும் பார்க்கக் கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களோ மிகப்பெரியவை. புரட்சிகரமானவை. இத்தகைய உலகிலே விஞ்ஞானம் மட்டுமன்றி மனிதப் பண்பியல் பற்றிய ஞானமும் அவசியமாகும். அல்லாவிடில் மனிதன் தான் ஏற்படுத்தியிருக்கும் செயற்கை உலகின் ஆதிக்கவாதியிடு வான் அடிமையாகும்போது மனிதப்பண்பை இழப்பான். எனவே ஒன்றையொன்று சமப்படுத்தவும், பூரணப்படுத்தவும், விஞ்ஞானமும் மனிதப்பண்பியலும் ஒருமித்து இணைய வேண்டும். இத்தகைய இணைப்பிற்குத் தொல்பொருளியலும் துணைபுரியும். தொல்பொருளியல் பழமை பற்றிய மட்டுமன்று சமகால நாகரிகத்திலே பழைய பண்புகள் எந்த அளவு நிலவுகின்றன என்பதை அறியவும் உதவும். மனிதன் எக்காலமும் இயற்கையின் தடைகளை வென்று முன்னேறி நாகரிகங்களை ஏற்படுத்தினான், விஸ்தரித்தான் என்பதை அறியவும் தொல்பொருளியல் துணைசெய்கிறது.

குறிப்பிட்டகாலத் தொல்பொருட் சின்னங்கள் அக்கால மனித நாகரிக நிலைகளைப் பிரதிபலிக்கின்றன. மேலெழுந்தவாரியாக நோக்கும் போதே இவ்வுண்மை புலனாகும். சமுத்திருக்கே அநுராதபுர பொலநறுவைச் சின்னங்களை உற்றுநோக்கும் போது அக்கால இலங்கையின் நாகரிகச் சிறப்புத் தெளிவாகும். வடஇந்தியாவிலே சந்திரோடையிலே இதுவரை கிடைத்துள்ள பலவகைகளான சின்னங்கள் மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், நாணயங்கள், மணிகள், விதாபிகளின் அடிப்படுநிகள், சிலைகள், விக்கிரகங்கள், சில சாசனங்கள் மணிக்கோவைகள். சித்திர வேலைப்பாடுகள் சில பொருட்கள் முதலியனவற்றைத் தொகுத்து நோக்கும் போது பழமையான யாழ்ப்பாணத்திலே கூட ஒரு முக்கியமான நகரமாய் விளங்கிய எல்லையில் இருந்ததை மிகப்பழமையான இந்திய நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ முதலிய நகரங்களிற் கிடைத்துள்ள சின்னங்கள் சிலவற்றிலும் முழுமையாகக் காணப்படும் ஆதாரம் அக்காலத்து நகர ஒழுங்கமைப்பு முதலியவற்றின் ஏற்படுத்திய ஆதிக்கமுள்ள மதிநுட்பத் திறனுடைய போதின் மனத்தின் பதிவுகளைப் பிரதிபலிக்கின்றன.

இன்றைய மனித சமூகம் நாளைய சமூகத்தின் முன்னோடியாக விளங்குகின்றது. எந்தவொரு காலத்திற்கும் பிற்காலத்திற்குமிடையிலே ஏதோ வகையில் வெவ்வேறு அவ்வினை தொடர்புகள் காணப்படுகின்றன. பழமையான எமது முன்னோர்களைப் பற்றிய அறிவினைத் தொல்பொருளியல் எமக்குப் பெருந்துணையாக அமைகின்றது. சமுத்து மக்

னின் கட்டுப்பாடான வரலாற்றின் அறிகுறிகளைத் தொல்பொருள்களிலும் மிக முக்கியமான மூலங்களாகும். ஆகவே நாமும் தொல்பொருள்களைப் போற்றி எமது மூதாதையரைப் பற்றிக் கூடுதலாக அறிவோமாக! மனிதப் பண்பினை வளர்ப்போமாக!

(முற்றும்)

## தெல்லிப்பழையிலே புராதன நாணயமுடிப்பு

சென்றவாரம் தெல்லிப்பழையிலே கிணறு வெட்டுகையிலே சுமார் 8 1/2 அடி ஆழத்திலே புராதன நாணயங்களைக் கொண்ட முடிப்பொன்று வெளிப்பட்டது. இந் நாணயங்களிற் சில யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகப் பொருளாளர் திரு. ஆ. இலங்கைச் செல்வன், செயலாளர் திரு. வி. சிவசாமி அவர்களுக்குக் கிடைத்துள்ளன. தமக்குக் கிடைத்த நாணயங்கள் ஏறத்தாழ மத்திய கால இலங்கையிலாட்சி செய்த (13-ம் நூ) 11-ம் பராக்கிரமபாகு, 4-ம் விஜயபாகு, 1-ம் புவனேகபாகு மன்னர் காலத்தன என அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர். தொடர்ந்து இவைபற்றி விசாரித்து வருகின்றனர். இதுபோன்று சில காலத்தின்முன் மட்டுவிலிலும் புலோலியிலும் காசுகள் பெறப்பட்டதாக அறியப்படுகின்றது.

## சித்தன்கேணியிற் பொற்காசு

கி. பி 16-ம், 17 ம் நூற்றாண்டளவைச் சேர்ந்த "வீரராயர் பணம்" ஒன்றினை யாழ்ப்பாணக் கல்லூரிச் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் வித்துவான் இ. [illegible]ப்பிரமணிய ஐயர் தமது வீட்டு வளவிலே கண்டெடுத்துள்ளார். இதுபோன்ற பொற்காசுகள் இதுவரை கிடைத்தனவாயினும் இதிற் காணப்படும் அம்சங்கள் அருகியே காணப்பட்டன. இத்தகைய காசுகள் "பூவராகன்" எனவும் அழைக்கப்படும். இவை விஜயநகர மூலமாகத் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையிலும் புழக்கத்திலேற்பட்டிருக்கலாம்.

'ஈழநாடு' வார மலரில் வந்த கட்டுரைத் தொடரின் மறுபிரசுரம்